# சம்மாந்துறை பிரதேச சபையின் 21வது கூட்டறிக்கை
# 2019.11.04

சம்மாந்துறை பிரதேச சபையின் 21வது அமர்வு 2019.11.04 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

## சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 14. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 19. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 20. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

## சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

## கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 21வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

## தீர்மானம் 01

சென்ற மாதக் கூட்டறிக்கையினை ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இன்று அரசில் இருக்கும் நிதிப் பிரச்சினையால் எமது சகல வேலைத்திட்டங்களும் 30 ஆந் திகதிக்கு முதல் பூர்த்தி செய்து 05 ஆந் திகதிக்கு முன் இறுதி ஆவணங்கள் அமைச்சுக்களுக்கோ, மாகாண சபைகளுக்கோ போகாவிட்டால் இவ் வருடத்திற்குள் பணத்தை பெற்றுக்கொள்வதில் ஒரு பின்னடைவு ஏற்படலாம். எனவே தயவு செய்து உங்கள் வட்டாரங்களில் அல்லது மேற்பார்வையில் நடக்கும் வேலைத்திட்டங்களை அவசரமாக நிறைவேற்றி அதற்குரிய கொடுப்பனவுகளை இவ் வருடத்திற்குள் எடுத்துக் கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். எமது சபையின் கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் அவரின் முகநூலில் ஒரு பதிவீட்டை செய்திருந்தார். அது அவரின் கருத்தாக இருந்தாலும் சபையின் நடவடிக்கைகளை பற்றி மற்றும் சபையில் எடுக்கும் தீர்மானங்களைப் பற்றி இதுவரை காலமும் நாம் நன்றாக பயணிக்கும் வேளையில் சட்டத்தை ஒழுங்காக விளங்காமல், உள்வாங்காமல் அதை காரணம் காட்டி வரவு செலவு திட்டத்தில் எது இருந்தாலும் இது நடக்காத பட்சத்தில் நான் எதிர்த்து வாக்களிப்பேன் என்ற ஒரு விடயத்தை தெரிவித்திருக்கின்றார். அது உண்மையாக இவ்வளவு காலமும் இச் சபை ஒற்றுமையாக பயணித்ததற்கு ஒரு இழுக்கு.

கௌரவ உறுப்பினர் சுட்டிக்காட்டும் அக் குறைபாட்டை நான் சட்டரீதியாக விளக்க வேண்டும் என்றால், பிரதேச சபை சட்டத்தின் 12வது சர்த்தில் கூறப்படுவது ''பிரதேச சபை ஒன்று காலத்திற்கு காலம் சபை உறுப்பினர்களைக் கொண்ட அல்லது பகுதியளவில் சபை உறுப்பினர்களையும், பகுதியளவில் பிரதேச சபையின் இடப்பரப்பில் வேறு குடியிருப்பாளர்களையும் அத்தகைய பிரதேச சபை இடப்பரப்புக்குள்ளாகத் தாபிக்கப்பட்ட கிராமோதய சபைகளின் தவிசாளர்களையும் கொண்டுள்ள குழுக்களை சபையின் தத்துவங்களும், கடமைகளும் அத்துடன் பணிகளும் எது தொடர்பாகவேனும் அல்லது சபையின் பரிசீலனையில் கீழ் உள்ள கருமம் எது தொடர்பாகவேனும் சபைக்கு ஆலோசனை கூறும் நோக்கத்திற்கு என நியமிக்கலாம்'' இதன் பின்னனி சென்ற சபை பழைய தேர்தல் முறையில் நடந்தது. விகிதாசாரப்படி அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அதனால் பரந்து வாழும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தமாட்டார்கள் என்ற ஒரு காரணத்திற்காகத்தான் இச் சட்டத்தை வரையும் போது தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு அப்பால் உங்களுக்கு உதவியாக நீங்கள் குழுக்களை அமைக்கலாம். கொளரவ உறுப்பினர் அச்சி முஹம்மட், கொளரவ உறுப்பினர் நஜீம் அவர்களுக்கும் தெரியும். நாம் குழு அமைத்து கூட்டத்திற்கு 40 பேர் அழைத்தால் 04 பேர் வருவார்கள். இரண்டு மூன்று தரம் அழைத்து விட்டு விட்டோம்.

நிர்வாகம் என்பது தவிசாளர் மட்டும் அல்ல. நிர்வாகத்திற்கு ஊழியர்கள் இருக்கின்றார்கள். இத் தேர்தல் முறை கொண்டுவரப்பட்டதும் அது மாறியது. ஏனென்றால் ஒவ்வொரு வட்டாரத்திலும் நியமிக்கப்படுபவர்கள் மக்களின் பிரதிநிதிகள். அதற்கு மேலாக கட்சியின் பிரதிநிதிகளும் பட்டியல் மூலமாக வருகின்றார்கள். ஒட்டுமொத்தமாக அரசியல் பிரதிநிதித்துவமும், மக்கள் பிரதிநிதித்துவமும் சேர்ந்துதான் இச் சபை. நாம் இம்முறை கூட்டுப்பயணத்தில் கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்கள் மட்டுமல்ல எமது சனசமூக நிலையங்கள் பிரதேச சபையினை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் சபைகள். அச் சபைகளையும் உள்வாங்கி அவர்களது கருத்துக்களையும் எடுத்து எல்லா கௌரவ உறுப்பினர்களது கருத்துக்களையும் எடுத்து தயாரிக்கப்பட்டிருப்பது இச் சபையின் வரவு செலவுத் திட்டமே. தவிர தவிசாளர்களின் வரவு செலவுத் திட்டம் அல்ல. இன்றும் கூட நீங்கள் வருமானத்தை குறைக்க வேண்டும் என்று தீர்மானித்தால் அல்லது இன்னும் வருமானத்தை கூட்டவேண்டும் என்று தீர்மானித்தால் நாம் செலவை கூட்டலாம் அல்லது வருமானத்தை குறைக்கும் அளவுக்கு செலவை குறைக்க வேண்டும். இது சபைக்காக சபை வழிநடத்துவதற்காக உருவாக்கப்படுகின்றது. இதற்கு என்னோடு தனிப்பட்ட முரண்பாடுகள் இருந்தாலும் அதை சபை நடவடிக்கைகள் முக நூல்களில் போட்டு சபையின் கௌரவத்தை குறைக்கக்கூடாது என்ற பணிவான வேண்டுகோளை விடுத்துக் கொள்கின்றேன்.

**தீர்மானம் 02**
சென்ற மாதம் 2019.10.01 தொடக்கம் 2019.10.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இல 18 அதைப்பற்றி சிறிது விளக்கம் கூறுங்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உடங்கா பகுதியில் இருக்கும் ஒரு நபர் செங்கல் வியாபாரங்களுக்கு எதிராக ஜனாதிபதிக்கு எழுதி, உள்ளூராட்சி ஆணையாளருக்கு எழுதி எல்லோருக்கும் எழுதி ஏன் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை? தற்போது நாம் நடவடிக்கை எச்சரிக்கை கொடுத்து DS மூலமாக, GS மூலமாக எது செய்தும் அவர்கள் அதை அகற்றிக்கொள்ளவில்லை. இறுதியில் சுற்றாடல் சபையில் தந்த அறிவுரை இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தால் மட்டுமே இதை முடிவுக்கு கொண்டு வரலாம். இதற்காக இச் சபையில் தீர்மானம் எடுத்துதான் அவ் வழக்குகளை தாக்கல் செய்து அப் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வந்துள்ளோம். இது எல்லாவற்றுக்கும் சபை தீர்மானம் உள்ளது. தற்போது இவ்விடயம் சட்டவிரோதமான கட்டடங்களுக்கும் செய்ய வேண்டும்.

**தீர்மானம் 03**
அங்கத்தவர்களின் விசேட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கமைய கீழ்வரும் கட்டணங்களை 01.01.2020 இல் அதிகரிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| I. | கட்டிட அனுமதி விண்ணப்பப் படிவம் | - 800 + Vat |
| II. | வீதி இரோகைச் சான்றிதழ் வழங்கல் | - 1000 + Vat |
| III. | ஆதன மாற்ற விண்ணப்பப் படிவம் | - 1000 + Vat |
| IV. | படவரைஞர் பதிவுக் கட்டணம் | - 5000 + Vat |

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

**தீர்மானம் 04**
2020 ஆம் வருடத்தின் பொருட்டு, வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக குறிப்பிடப்பட்ட வியாபாரங்களில் இருந்து உரிமைக் கட்டணமும், வரியும், விளம்பரக் கட்டணமும் சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குள் 2020 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து விதித்து அறவீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன் 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச சபையின் அலுவலகத்தில் செலுத்தப்படல் வேண்டும் என்றும் தொடர்ந்து வரும் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 01ம் திகதிக்கு முதல் செலுத்துவதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

**தீர்மானம் 05**
ஏலவே வரி அறவீடு செய்யப்படும் பிரதேசங்களான 20 கிராம சேவகர் பிரிவுகளிலும் 2019 ஆம் ஆண்டின் வரி மதிப்பீட்டை 2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடாக ஏற்று ஆதனவரி அறவீடு செய்ய சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

அத்துடன் புதிதாக வரி அறவீடு செய்ய 1808ம் இலக்க 2013.04.26 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புதிய 22 பிரதேசங்களுக்கும் தற்காலிக மதிப்பீடு செய்து ஆதனவரி அறவிடுவது எனவும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மணல் ஏற்றி இறக்குவோர் தொடர்பான வரி அறவீடு தொடர்பாக ஒரு தொகை தீர்மானிக்க இயலாமல் விட்டுவிட்டோம். அதை நாம் எப்படி செய்யலாம். ஏனென்றால் அதில் சம்பாதிக்கவேண்டும் என்று இல்லை. அதனால் வரும் நட்டங்களில் இருந்து எப்படி பாதுகாக்கலாம்? பிரச்சினை என்னவென்றால் Dump Truck வந்து கல்வெட்டை சேதப்படுத்துகின்றது. இவ்வாறு சேதப்படுத்தினால் சொல்லித் தருவதற்கு ஒருவரும் இல்லை. அம் முழுச்செலவையும் சபை செய்யவேண்டும். பேமிட் உள்ளவர்கள் றூட் பேமிட் எடுக்க வேண்டும். அந்த நேரம் Deposit கட்டணம் இல்லாவிட்டாலும் ஒரு Deposit ஆக எடுத்து வைத்திருந்தால் அப்படி குற்றம் வரும் போது அதில் பதிலீடு செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். உதாரணமாக பெரியபள்ளிவாசல் அருகில் கல்வெட் உடைந்துள்ளது. ஏனென்றால் Dump Truck உடைத்து விட்டது. யார் என்று கேட்டால் தெரியாது. இதை எப்படி செய்யலாம். பிரச்சினை என்னவென்றால் புதிதாக செய்கின்ற கல்வெட்கள் 09 இன்ச் போட்டு கம்பி போட்டு செய்கின்றோம். ஆனால் அது வரும் வேகத்தில் Break அடித்தால் அவ்விடம் உடைந்துவிடும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, குறிப்பாக மணல் ஏற்றுகின்ற வாகனங்களுக்கான அறவீடு என்பது மணல் ஏற்றுவதற்காக புவிச்சரிதவியல் திணைக்களத்தில் இருந்து அனுமதியை பெறுகின்றார்கள். அவர்கள் எமது பிரதேசத்தில் உதாரணமாக ஆற்றிலும் சரி தரையிலும் சரி மண் ஏற்றுவதற்கான இடத்தை அடையாளப்படுத்தி அதற்கான அனுமதிப் பத்திரத்தினையும் பிரதான பாதைகளின் ஊடாக மணலை கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரம் மாத்திரமே வழங்கப்படுகின்றது. உள்ளக பாதைகளின் ஊடாக செல்வதற்கான அனுமதிப்பத்திரம் இல்லை.

இவ்வாறாக இருந்தால் வாகன உரிமையாளர்களிடம் உள்ளக பாதைகளை பயன்படுத்துவதற்கு சபையின் ஊடாக வழங்கப்படுகின்ற ஒரு அங்கீகாரம் பெற்ற ஒரு ஆவணம் வழங்கப்பட வேண்டும். அதனை எம்மால் எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியும். ஏனென்றால் குறிப்பாக ஒவ்வொரு வாகனத்தினுடைய பெறுமதிக்கு ஏற்ற வகையில் அதாவது பாரஊர்திகள் அதில் எத்தனை தொன் பாரங்களை ஏற்ற முடியும் என்ற அளவுக்கு அதற்கு ஏற்ற தூரம் அவ் அனுமதிப்பத்திரத்தில் வழங்கப்படுகின்றது.

எனவே இவ்வாறு இருக்கும் போது உள்ளக பாதைகளை பயன்படுத்துவதற்கான அனுமதியை நாம் வழங்குவதாக இருந்தால் இது தொடர்பாக சம்மந்தப்பட்ட புவிச்சரிதவியல் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு இவ்வாறான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்ற போது இவ் வாகன உரிமையாளர்கள் உதாரணமாக சம்மாந்துறை பிரதேச சபையினுடைய எல்லைக்குள் இருந்து கூடுதலான மண் அகழப்படுகின்றது. அதே போன்று மண் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய இடங்களையும் கூடுதலாக அடையாளப்படுத்தி இருக்கின்றார்கள் சம்மாந்துறை பிரதேச சபையினுடைய எல்லைக்குள் ஆகும்.

அவ்வாறு இருக்கின்ற போது இதற்கு எங்களுடைய பாதைகளை அவர்கள் பயன்படுத்துகின்றார்கள். இவ் கணரக வாகனங்கள் கூடுதலாக சிறிய பாதைகளை பயன்படுத்தும் போது பாதைகளும் சேதமடைகின்றது. அதற்கு ஏற்றவாறு பக்கத்தில் இருக்கின்ற Electric Post, Telecom Post இவ்வாறு பல்வேறுபட்ட சேதங்களை இவ் கணரக வாகனங்கள் ஏற்படுத்துகின்றது. எமது பாதைகளையும்

கூடுதலாக புதிதாக செப்பனிட்ட பாதைகளை மக்களின் பாவனைக்காக கையளிக்கின்ற காலங்கள் முடிவடைவதற்கிடையிலும் இவ்வாறான கணரக வாகனங்களை அப் பாதைகளில் செலுத்துவதால் அப் பாதைகளும் கூடுதலாக சேதமடைகின்றது.

ஆனால் இவ் அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் இம் மண் அகழ்வை ஏற்படுத்தக்கூடிய இடம் வழங்கப்பட்ட அனுமதியாளர்கள், அவர்களுடைய இடத்தில் இருந்து மண்ணை ஏற்றிக் கொள்கின்ற வாகன உரிமையாளர்கள் இவர்களுக்கு வழங்கப்படுகின்ற அனுமதிப் பத்திரங்களோடு எமது சபையினால் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமும் அவர்கள் பெறவேண்டும். இவ் அனுமதிப்பத்திரம் மாதம் ஒன்றுக்கே வழங்கப்படுகின்றது. அவ்வாறே ஒவ்வொரு மாதமும் சபையினூடாக அனுமதிப் பத்திரத்தை பெற்று இவ் கணரக வாகனங்களை உள்ளக பாதைகளில் செலுத்தினால் எமது பாதைகளுக்கு பாதுகாப்பாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அவர்கள் பிரதான வீதியை பாவித்தாலும் ஒரு Clearance Certificate எடுப்பதற்கு சபைக்கு வருகின்றார்கள். ஆனால் கௌரவ உறுப்பினர் கூறியது போல் மண் ஏற்றுவது மட்டுமல்லாமல் களி, கல் ஏற்றுவதும் Dump Truck இல் ஆகும். கல்லோ, மண்ணோ பிரச்சினை இல்லை. பிரச்சினை என்னவென்றால் கணரக வாகனங்கள் ஆகும். கணரக வாகனங்கள் உள் பாதைகளில் செல்வதற்கு ஒரு தடை. அதற்கு என்ன செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, மண், கல், களி இதன் பின்னனியைப் பார்த்தால் எமது தேவைக்காகத்தான் அத் தொழிலே நடக்கின்றது. நாம் புவிச்சரிதவியல் திணைக்களத்திற்கு அதிகமான பிரதேசம் எமது பிரதேசமாக காட்டப்பட்டிருந்தால் எங்களது அனுமதியையும் பார்வையிடச் செல்கின்ற எமது பிரதேச சபை உரியவர்களையும் உள்வாங்க வேண்டும் என்று அவர்களுக்கு கடிதம் எழுத வேண்டும். எமது ஊரில் உள்ள பிரச்சினை அதை இலகுவாக தடை செய்யலாம். அதாவது பெரிய தூண் போட்டு 02 கேடர் போட்டால் குறிப்பிட்ட வாகனங்கள் செல்லலாம். ஆனால் எமது ஊரில் நெல் ஏற்றி செல்வதால் அதை செய்ய இயலாது. சில இடங்களில் உள்ளது. 02 பெரிய தூண் போட்டு நடுவில் 02 Cross Bar போட்டால் Dump Truck எல்லாம் அந்தப் பாதைகளில் பயணிக்க முடியாது. ஆனால் நாம் இதை செய்ய இயலாது காரணம் என்னவென்றால் வயல்காரன் வேளான்மை செய்துவிட்டு கூலியை கொடுக்கும் போது அப் பாதைகளில் தான் செல்வார்கள். அதன் மேல் நபர்களும் இருந்து செல்வார்கள். அவ் உயரத்தை பார்க்கும் போது நாம் அதை செய்ய இயலாது.

எமது பாதைகளில் ஏற்படுகின்ற விளைவுகளை ஏதோ ஒரு முறையில் பொதுமக்களுக்கு விளங்கப்படுத்த வேண்டும். இப் பாதுகாப்பில் பொதுமக்களையும் உள்வாங்க வேண்டும். நாம் எவ்வளவோ காவல்களை போட்டாலும் அவர்கள் ஒரு ஒத்துழைப்பை வழங்கவில்லை என்றால் இதை நடைமுறைப்படுத்த இயலாது. பாதைகள் உடைந்தவுடன் யார் உடைத்தது என்று எமக்கு தெரியாது. எத்தனையோ இடங்களில் பார்க்கின்றோம் இப் பாதைகளை அகலமாக போட வேண்டும் என்று சொல்லுகின்ற வேளையில் அவர்கள் தன் இஸ்டத்துக்கு கொங்கிறீட் பாதைகளை இடுகின்றார்கள். நான் ஒவ்வொரு முறையும் கதைக்கின்றேன். ஆனால் ஒருவருக்காவது சரியான நடவடிக்கை எடுத்து கட்டடம் உடைக்கப்படுமானால் ஏனையவர்கள் பயப்படுவார்கள் என்பதுதான் எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கனிய வளங்கள் அகழ்வு அனுமதிப் பத்திரங்கள் Transport செய்வதற்கு ஒவ்வொரு மாதமும் Transport பேமிட் எடுக்க வேண்டும். Transport பேமிட் எடுக்கின்ற காலகட்டத்தில் மட்டும் ஏதாவது ஒரு கட்டணங்கள் அதாவது நிலையான ஒரு கட்டணமோ அல்லது பேமிட் முடியும் காலம் வரைக்கும் உதாரணமாக 06 மாதமோ அல்லது 01 வருடமோ தருவார்கள். அப் பேமிட் 06 மாதம் என்றால் அதற்குரிய Deposit பணம் எம்மிடம்

இருக்க வேண்டும். அல்லது ஒரு வருடம் அனுமதிப்பத்திரம் கொடுக்கப்பட்டிருந்தால் ஒரு வருடத்திற்குரிய Deposit பணம் எம்மிடம் இருக்க வேண்டும். அவர்கள் அவ் அனுமதிப் பத்திரத்தில் இருந்து விலகினால் அவர்கள் முறையாக எமது சபைக்கு அறிவித்து அவ் Deposit பணத்தை எடுப்பதற்கும் ஒரு ஏற்பாடு செய்தால் நல்லது என்பது எனது கருத்து ஆகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் இதை பிரதேச செயலாளர், புவிச்சரிதவியல் திணைக்களம், பொலிஸ் 03 ஐயும் சேர்த்து எப்படி இக் கணரக வாகனங்கள் உண்மையாக இதில் மண் அகற்றுவதையும் பார்க்க கல், மண், செங்கல், களி போன்றவற்றை கொண்டு செல்கின்ற லோட் இனால் அப் பாதிப்புகள் வருகின்றது. அதனை நாம் எம் முறையில் சாதகமாக செய்யலாம் என்று கேட்டறிந்து அடுத்த சபையில் சமர்ப்பிக்கின்றேன்.

**தீர்மானம் 06**
பிரதேச சபையின் எல்லைக்குள் மண் ஏற்றி, இறக்கும் வாகனங்கள் எமது பாதைகளைச் சேதப்படுத்துவதால், அச் சேதங்களை மீளமைக்கத் தேவையான அறவீடு ஒன்றினை மேற்கொள்வதற்காக பிரதேச செயலாளர், புவிச்சரிதவியல் திணைக்களம், பொலிஸாருடன் தொடர்பு கொண்டு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ள சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பிரதேச சபையின் சட்டத்தின் படி பொது மயானங்கள் எல்லாம் பிரதேச சபையின் சொத்தாக இருக்க வேண்டும். ஆனால் எமது பகுதியில் முஸ்லிம் பகுதிகளில் பள்ளிவாசல்களோடு ஒத்ததாக இருக்கின்ற படியால் அவைகள் பள்ளி நிர்வாகங்களுக்கு கீழ் வருகின்றது. அதே நேரம் அவைகள் ஒழுங்குபடுத்தப்படாததனால் கிறிஸ்தவ, இந்து, பௌத்த போன்றவைகள் எமது பராமரிப்பில் இல்லாமல் இயங்குகின்றது. இது அச் சமூகங்களுக்கு பிரச்சினை உள்ளது. இவற்றை அச் சட்டத்தின்படி ஒழுங்குபடுத்துவதற்காக சபையில் நாம் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும். மஹல்லா மஹல்லா பள்ளிவாசலின் பரப்பு ஏரத்தாள 44 ஏக்கர் ஆகும். அது இன்னும் அரச காணியாகவே காட்டப்படுகின்றது. அவை அப்படியாக இருக்குமாயின் ஒருகாலத்திலும் அப் பரப்பிற்கு ஒரு பள்ளிவாசலுக்கு அது வெஸ்ட் செய்யப்படாது. நான் DS உடனும் கதைத்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் District Coordinating Comittee தலைவருடனும் கதைத்து அவர்களது ஆதரவும் வேண்டும்.

சபை என்பது சம்மாந்துறையின் சொத்து ஆகும். மஹல்லா மஹல்லா பள்ளிவாசல் பராமரிப்பில் உள்ள இடத்தை தவிர மையவாடியை சபைக்கு கீழ் கொண்டு வந்தால் நாம் அதனை பராமரிக்கலாம். மஹல்லா மஹல்லா மையவாடியையும், சென்னல் கிராமம் - 01 இல் இருக்கின்ற அழ்பர் மையவாடி அது புரம்பாக இருப்பதனால் அது இரண்டையும் நம்பிக்கையாளர் சபையிடம் கேட்டு அவற்றை உள்வாங்கினால் பராமரிக்கும் மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் பாதுகாக்கக்கூடிய இடமாக மாறும். தமிழ் பிரதேசங்களில் உள்ளவைகள் சபைக்கு கீழ் கொண்டு வந்து அவற்றை பராமரிப்பது என்பது அவர்களது வேண்டுகோள். எனவே சபை முடிவாக எடுத்து பள்ளிவாசல் நிர்வாகங்களுக்கும், கோயில் நிர்வாகங்களுக்கும், DS இற்கும் தெரிவித்து சட்டபூர்வமாக எமது கட்டுப்பாட்டுக்கு கீழ் கொண்டு வர வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் இஸ்மாயில்புர மையவாடியையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதையும் சேர்த்துக் கொள்வோம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நைனாகாடு மையவாடியையும் சேர்க்க வேண்டும். அது பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்திற்கு கீழ் வருவதில்லை. பள்ளிவாசலுடன் உள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பள்ளிவாசலுடன் இருக்கின்ற இடங்களுக்கு நாம் அவர்களின் அனுமதியோடு எடுக்க சொன்னால் அதை எடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நைனாகாடு மையவாடியையும் வேறாக பிரிக்கக்கூடிய சாத்தியம் இருக்கின்றது. அதில் இருக்கின்ற சந்தேகமான விடயம் என்னவென்றால் தற்போது மையவாடிகள் நம்பிக்கையாளர் சபையின் பராமரிப்பிலும், பள்ளிவாசல் நிர்வாகிகளின் பராமரிப்பிலும் இருக்கின்றது. இதனை நாம் சபையின் பராமரிப்பிற்கு மாற்றுகின்ற போது அதாவது சபையினுடைய சொத்தாக மாறுகின்ற போது இந் நிலங்களை சட்ட ரீதியாக அரச வேறு தேவைகளுக்காக பயன்படுத்தும் போது அல்லது அது தொடர்பாக அந் நிலங்களை பெற எத்தனிக்கின்ற போது எமது தீர்மானம் எவ்வாறாக இருக்க வேண்டும்?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இற்றைவரைக்கும் இக் காணிகள் எல்லாம் அரச காணியாகத்தான் இருக்கின்றது. கோயிலுக்கு வெஸ்ட் பண்ணியோ அல்லது எதற்கோ வெஸ்ட் பண்ணவில்லை. மயானம் என்றபடியினால் ஒருவரும் எடுப்பதில்லை. கோரக்கோயிலுக்குள் இருக்கின்றதில் எல்லா Document இலும் State Land என்றுதான் இருக்கின்றது. இவற்றை சபையின் கீழ் வெஸ்ட் பண்ணுகின்ற போது சபையின் அங்கீகாரம் இல்லாமல் ஒன்றுமே நடக்க இயலாது. சபை என்பது அரசாங்கத்திற்கு அப்பால் இந்த ஊர். இது Department இல்லை. சபை தீர்மானம் இல்லாமல் எதுவும் நடத்த இயலாது. அது ஒரு பாதுகாப்பு ஆகும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மறைந்த அப்துல் மஜீட் அவர்கள் கெஸட் பண்ணித்தான் எடுத்திருக்கின்றார்கள். எடுத்தது மட்டுமல்லாமல் அதற்குள் இருந்தவர்களையும் வெளியேற்றி அவர்களுக்காக வேறு வீட்டுத் திட்டங்களை உருவாக்கி கொடுத்தார். மிக முக்கியமாக நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது உடனடியாக அதன் எல்லைகளை போட வேண்டும். இது தொடர்பாக சமரகோன் எழுத்தாளன் எழுதுகின்ற போது அதை குறிப்பிட்டு எழுதினதால் அவரை உடனடியாக எந்தவொரு புதைபொருள் ஆராட்சியும் மையவாடிக்காக பிரகடனப்படுத்தப்பட்டதில் இல்லை. மல்லிகை தீவின் சவக்காலையின் எல்லைகளை நாம் சென்றுதான் போட்டோம்.

ஏனென்றால் அப் பகுதி வயல்காரரர்கள் அவ் எல்லையை பிடித்துவிடுவார்கள் என்பதற்காக ஒரு நிறுவனத்துடன் இணைந்து அதற்கான கட்டுமான பணியை கௌரவ தவிசாளரும் நாமும் சென்று கல்லு வைத்து கட்டி அதனை பாதுகாத்தோம். அதே போல் Camp இற்கு முன்னுள்ள சவக்காலையையும் யனைகள் வந்து அவ் ஊர் மக்களுக்கு அழிவை ஏற்படுத்துவதனால் நாம் நின்றுதான் துப்பரவு செய்தோம். தற்போது சட்ட ரீதியாக மஹல்லா மஹல்லா பள்ளிவாசல் 100 வருட லீசிங் என்ற அமைப்பில் பிரதேச சபையை சொல்லி உறுதி எழுதிக் கொடுக்கலாம். பேமிட் வழங்க முடியாது. எக் காரணத்தைக் கொண்டும் இவ் 44 ஏக்கரில் ஒரு இன்ச் நிலத்திற்கு கூட யாருக்காவது எந்த உறுதியோ, பேமிட்டோ வழங்க முடியாது என்பதுதான் எனது கருத்து ஆகும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வளத்தாப்பிட்டி மையவாடிக்கும் இதுவரையில் எல்லை காணப்படாமல் இருக்கின்றது. பிரதேச சபையில் அரசியல் நிர்வாகம் இல்லாத காலத்தில் எனக்கு வந்த முறைப்பாட்டிற்கமைய DS உடன் கலந்து பேசிய போது மையவாடிகள், மயானங்கள் எல்லாம் பிரதேச சபைக்கு கீழ் வருவதால் பிரதேச சபைக்குதான் அதிகாரம் இருக்கின்றது. எனவே பள்ளி நிர்வாகத்தினருடனும், கோயில் நிர்வாகத்தினருடனும் கதைத்து நாம் அடுத்தடுத்த கூட்டங்களில் தீர்மானம் எடுத்தால் நல்லது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் தீர்மானமாக எடுப்போம். பின்னர் அவர்களது அங்கீகாரத்துடன் செய்வோம்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மக்களுக்கு ஒரு தெளிவுபடுத்தல் தேவைப்படும் என்னவென்றால் பிரதேச சபையின் கீழ் கொண்டு வந்தால் Body அடக்குவது என்றால் எங்களிடம், பிரதேச சபையிடம் அனுமதி எடுக்க வருமோ என்ற சந்தேகம் அவர்களுக்கு வரும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தற்போதும் ஏதோ ஒரு அமைப்புக்கு கீழ் தானே உள்ளது?

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இல்லை. தற்போது ஒரு மரணம் ஏற்பட்டால் அவ் Body அடக்குவதற்கு GS இடம் கூறுவோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்தக் கட்டுப்பாடு ஒன்று வரவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் சிக்கல்கள் வரும். அவர்கள் வந்து Sub Office இல் Notice இருக்கும் அதற்கு ஒரு கட்டணம் விதிப்பது என்றால் கட்டணத்தை விதித்து அதனை பராமரித்து ஏனைய வேலைகளையும் செய்து கொடுக்கலாம்.

**தீர்மானம் 07**
கீழ்வரும் மயாணங்களினை உரிய மத பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி பிரதேச சபை கையேற்று, அவற்றினை அபிவிருத்தி செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

I. மஹல்லா மஹல்லா மையவாடி, புளக் ஜே மேற்கு - 01
II. அழ்பர் மையவாடி, செந்நெல் கிராமம் - 01
III. வீரமுனை சவக்காலை
IV. கோரக்கர் சவக்காலை
V. மல்வத்தை சவக்காலை
VI. வழத்தாப்பிட்டி சவக்காலை
VII. மல்லிகைத் தீவு சவக்காலை
VIII. இஸ்மாயில் புரம் மையவாடி
IX. நெய்னாகாடு மையவாடி

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.முஹம்மட் சஹீல் |

**தீர்மானம் 08**
RB - 0639, LL - 6939, RB - 0640 இலக்க வாகனங்களுக்கான டயர் மாற்றுவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.அச்சி முஹம்மட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஆர்.வளர்மதி

**தீர்மானம் 09**
RX - 8264 இலக்க இழுவைப் பெட்டி திருத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.சி.முஹம்மட் சஹீல்

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களினால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை போக்குவரத்து சபையின் வேலைத்தளத்தினை அகற்றுவதற்காக, நாம் காலாகாலமாக முடிவுகள் எடுத்து அம் முடிவுகளை பல காரணங்களுக்காக நிறைவேற்ற இயலாத நிலையில் உள்ளோம். இதில் பழைய மார்க்கட் திருத்தப்பட்டு 1,2 கடைகள் திறந்து மூடி ஏதோ ஒரு வகையில் மாற்றம் உள்ளது. அதை முழுமையாக செய்வது என்றால் CTB Workshop அவ்விடத்தை விட்டு செல்ல வேண்டும். அதற்குரிய இடத்தை இனங்கண்டு அவ் இடத்துக்கு எமது JCB அனுப்பி மட்டம் செய்தும் கொடுத்துள்ளோம். அவர்களின் Head Office மூலமாக அவர்கள் மத்தியிலும் எழுத்து மூல தொடர்புகள் நடைபெறுகின்றது. அண்மையில் நாரயம்பிட்டி தவிசாளர் அவர்களுக்கு ஒரு கடிதம் அவர்களின் சபை Regional Engineer எழுதியிருக்கிறார்.

அதாவது அவ்விடத்தில் ஒரு செட் அமைப்பதற்கு அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யச் சொல்லி அதை இவ்விடத்தில் இருந்து அகற்றுவதற்கு ஆகும். அவர்களும் முயற்சி எடுக்கின்றார்கள். எனவே நாங்களும் அதை அடிக்கடி நினைவு காட்டாமல் இருந்தால் அது இல்லாமலாகிவிடும். ஏனென்றால் Audit உம் ஒவ்வொரு தடவையும் ஏன் நீங்கள் சபைக்கு வருமானம் தரக்கூடிய இடத்தை இன்னொரு நிறுவனத்திற்கு கொடுத்திருக்கின்றீர்கள் என்று கேட்கின்றார்கள். எனவே அவர்களுக்கு மீண்டும் 03 மாத Notice ஆவது கொடுத்து அவ்விடத்தை விட்டு செல்ல வேண்டும் என்ற அழுத்தம் ஒன்று கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அது நடக்காது.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர்கள் மற்றும் ஏனைய எல்லோரினது முயற்சியினால்தான் Sliate பல கோடி ரூபாவால் கொண்டு வந்து கட்டப்பட்ட கட்டடம் குறிப்பிட்ட காலத்தில் அவர்களினால் ஒரு நெருக்கடி வரக்கூடாது என்று ஒரு மன்னிப்பை வழங்கியதை நாடித்தான் Sliate கட்டடம் நிரந்தரமாக்கப்பட்டது. நான் ஒரு Admission எடுப்பதற்கு அங்கு சென்ற போது அக்கரைப்பற்றில் இருந்து 02 பஸ் பிள்ளைகள் வந்து Admission எடுக்கின்றார்கள். இக்கட்டடம் கட்டப்பட்டு நிச்சயமாக அது சம்மாந்துறைக்குரியதாக இருக்காது. கிழக்கு மாகாணத்திலே நான் நினைக்கின்றேன் ஒரே ஒரு Workshop தான் உள்ளது. இவ் Workshop யை எப்படியும் அகற்ற வேண்டும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. எமக்கு வருமானம் வரவேண்டும். அவர்களும் ஒரு குறிப்பிட்ட வாடகையை தருகின்றார்கள்.

ஆனால் அவர்களின் முயற்சியில் அவர்களால் திடீர் என்று ஒரு கட்டடத்தை கொண்டுவர இயலாது. City Planning, கௌரவ உறுப்பினர்கள் இருக்கின்ற அமைச்சுகளோடு தொடர்புபட்டு ஒரு கட்டடத்தை கொடுத்தோம் என்றால் அதில் அவர்களை அனுப்பலாம். நானும் அடிக்கடி இது தொடர்பாக பேசுவது என்னவென்றால் எமது ஊரில் இருக்கின்ற VTC, Technical College போன்ற

அமைப்பில் வாகன திருத்துனர்கள் பயிற்சிகளை பெறுவதற்காக கடின உழைப்பை செய்து செல்லுகின்ற போது Theory இல் படித்தவர்களும் Practical இல் படித்தவர்களிலும் Practical மாணவர்களில் 20 பேர் எடுக்கின்ற ஒரு Interview இல் 20 பேரும் Practical மாணவர்கள் தான் சித்தியடைகின்றார்கள். எப்படியோ குறுகிய காலத்திற்குள் அவர்களை எழுப்ப வேண்டும். மொத்தத்தில் வருகின்ற வருமானத்தை உங்களால் வாடகையாக தர முடியாது. எனவே உங்களின் நன்மை கருதி நீங்கள் எழும்புவது நல்லது என்று ஒரு அறிவித்தல் கொடுத்து எழுப்ப வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களின் கருத்து உண்மையாக செயற்படும். ஆனால் நான் பாராளுமன்றத்தில் கூட இதைப்பற்றி கதைத்தேன். சம்மாந்துறையில் CTB Workshop, VTA, Technical College, Applied Science Feculty இருக்கின்றது. ஆனால் இது ஒவ்வொன்றும் தனித்தனியே இயங்குகின்றது. CTB Workshop இற்கு VTA இல் இருந்தோ, Technical College இல் இருந்தோ ஒரு மாணவர்களும் அனுப்புவதில்லை. 04 அல்லது 05 பேர் இருந்துவிட்டு அது உண்மையாக பிரயோசனப்படுவதில்லை.

Engine Repair ஒன்றுக்கும் அதிகாரமளிக்கக்கூடிய ஒருவரும் இல்லை. அப்படி இருந்தால் நமக்கு ஒரு அழுத்தம் வரும் செய்ய வேண்டாம் என்று ஏனென்றால் அது நடக்குதில்லை. VTA, Technical College இரண்டிலும் Motor Mechanism Course நடக்கின்றது. ஆனால் இரண்டும் வெவ்வேறு Level இல் நடக்கின்றது. அதனால் பாதிப்பு எமது பிள்ளைகளுக்கு ஆகும். அவ் ஒருங்கிணைப்பு இல்லை. VTA, Technical College மாணவர்களின் Practical Training இற்கு சிறந்தது. இது எமக்கு இருக்கின்ற நிர்வாகப் பிரச்சினை இது என்னுடைய பிரச்சினை இல்லை. சபையின் பிரச்சினை ஆகும். சபைக்கு வருமானம் தரக்கூடிய இடத்தை நாம் தடுத்து வருகின்றோம்.

**கௌரவ உறுப்பினர் எம். எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கோப்ரட்டி வளவு தொடர்பாக சென்ற மாதம் 31 ஆந் திகதி எமது நீதிமன்றத்தில் 14 நாட்களுக்குள் இவ் இடத்தை விட்டு எழும்ப வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே நாம் இன்னும் தாமதமாகி ஒத்துழைப்பு வழங்கக்கூடாது என்றும் நாமும் இதற்கான அறிக்கையை அனுப்ப வேண்டும் என்றும் கௌரவ தவிசாளர் அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 06 மாத அவகாசம் வழங்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இவ் இழுபறி 02 தசாப்தங்களாக நடந்து கொண்டிருக்கின்றது. மீண்டும் மீண்டும் நாம் இவ்வாறு கொண்டு செல்வது நல்லதாக இருக்காது என்பது எனது கருத்து. அதுமட்டுமல்ல இன்றைக்கு வருமானம் ஈட்டித்தரக்கூடிய இடம் ஆகும். நான் கௌரவ உறுப்பினர்கள் எல்லோருக்கும் கடிதம் அனுப்பி இருக்கின்றேன். அதில் நான் பாவித்தது கருமயோகம். கருமயோகம் என்பது உண்மையான தமிழ் பயன் அறியாது செய்யும் கடமை. நாம் என்ன செய்கின்றோம் என்று நமக்கே தெரிவதில்லை. சேவை ஒன்று செய்கின்றோம் இவ் ஊருக்காகவும், இப் பிரதேசத்திற்காகவும் என்ன பயன் கிடைக்கின்றது என்று எமக்கே தெரியாது. அவ்வாறு இல்லாமல் இதை ஒரு வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் கண்டிப்பான உத்தரவின்பேரில் இதை அகற்றி முற்றுமுழுதாக ஊரை விட்டு செல்ல வேண்டும் என்று கூறவில்லை. இதற்கு என்ன முடிவு என்பதுதான் எனது ஆதங்கம். எனவே தயவு செய்து தீர்க்கமான நல்ல முடிவை எடுத்து அப் பிரதேச மக்களுக்கு கிடைக்க வேண்டிய வளத்தையும், எமது சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை ஈட்டுவதற்கும் ஒரு ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்கள் குடும்பங்களிலே ஒரு வழக்கு இருக்கின்றது. திருமணம் முடித்தால் பிள்ளைகளை கொஞ்சக் காலம் பெற்றோர்கள் வைத்திருப்பார்கள். அதாவது இந்து கலாசாரத்தின் படி ஆண் பிள்ளைகளை வைத்திருப்போம். அவர்களை சில நாட்களில் வேறு வீடு கட்டி போவது என்றால் அவருக்கு பெரிய கஸ்டம் மன்றாடித்தான் செல்வார்கள். அவருக்கு தெரியாது நமக்கு ஒரு வீடு வருகின்றது என்றால் தன் வீட்டை கட்டியெழுப்பலாம், தனக்கு தேவையான பொருளாதார வளங்களை தேடிக்கொள்ளலாம், தான் ஒரு தனி மனிதராகலாம் என்று தெரியாது. ஆனால் அப்படி அழுது மன்றாடி போகின்ற பிள்ளைகள் சில காலங்களில் அவர்கள் தனி வீடு கட்டி சென்றுவிடுவார்கள். இங்கும் அதே பிரச்சினை தான் உள்ளது. எமது வீட்டுக்குள் இருந்து இடம் தேடாமல் இருக்கின்றார்கள் அல்லது தனக்கு ஒரு கட்டடம் தேடாமல் இருக்கின்றார்கள். அவர்களை அவசரமாக எழுப்ப வேண்டும். ஒரு 02 மாத அவகாசம் கொடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 02 மாதம் 03 மாதம் என்பது சாத்தியமில்லை. ஒரு அரச மாற்றம் வந்ததற்கு பிறகுதான் அவர்கள் கட்டடம் கட்டலாம். ஒரு 06 மாதம் கொடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, CTB வேலைத்தளம் எமது பிரதேசத்திற்கான சொத்தாக இருப்பதனால் இன்று அவர்களுக்கு நீண்டகாலம் வழங்கியிருந்தும் அவர்கள் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருக்கின்றார்கள். எனவே நாம் அவசரப்படுத்தினால் இவ் வேலைத்தளம் வேறு இடத்திற்கு அல்லது பிரதேசத்திற்கு அப்பால் செல்லுமாக இருந்தால் அதை நாம் எமது ஊருக்குரிய வளத்தை வழியனுப்பி வைக்கின்றதாக அமையும். எனவே இது தொடர்பாக ஒரு அரசியல் சூழ்நிலைகள் உருவாகியதன் பிற்பாடு அதற்குரிய நிலையை இங்கு இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களோடு கதைத்து அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கால அவகாசம் குறிப்பிட்ட கால அவகாசம் அல்லாமல் அதற்குரிய கால அவகாசத்தை வழங்க வேண்டும் என்பதே எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
06 மாத காலம் நீடித்து கடிதம் ஒன்று உத்தியோகபூர்வமாக வழங்குவோம்.

**தீர்மானம் 10**
இலங்கை போக்குவரத்துச் சபையின் வேலைத்தளத்தினை அதற்கென வழங்கப்பட்ட இடத்திற்கு இடமாற்ற 06 மாதகால அவகாசம் வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா |

**தீர்மானம் 11**
நடமாடும் இரவல் நூல் நிலையம் அமைப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

**வரவு செலவு திட்டம்:** முதலில் கௌரவ உறுப்பினர்கள் விளங்க வேண்டியது இது தவிசாளரின் வரவு செலவு திட்டம் அல்ல. இது சம்மாந்துறை பிரதேச சபையின் கௌரவ அங்கத்தவர்களின் பங்களிப்போடு மக்களின் சபைகள். சபைகள் என்றால் சனசமூக நிலையங்கள் பிரதிநிதிகளின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு அதுமட்டுமல்லாமல் இச் சபையில் சேவையாற்றும் ஊழியர்களின் கருத்துக்களும் உள்வாங்கி எமது அடையக்கூடிய வருமானத்தை இனங்கண்டு ஒரு சவாலுக்குரிய வரவு செலவுத் திட்டமாகத்தான் நான் இதை உங்களுக்கு அறிமுகப்படுத்த விரும்புகின்றேன்.

2019 ஆம் ஆண்டு நாம் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பித்த போது உத்தேச வருமானமாக 120 மில்லியன் வருமானமாக காட்டியிருந்தோம். அதற்கு ஏற்ப செலவுகளையும் நாம் தயாரித்தோம். இவ் வருடம் ஒரு சவாலாக நாம் எல்லோரும் சேர்ந்து எடுத்த முடிவுகளின் இவ் வருடத்தின் வரவு செலவுத் திட்டத்தில் நாம் கணிக்கும் வருமானம் ரூபா 213,820,588/- ஆகும். இது சென்ற வருடத்தை விட 78% கூட ஆகும். சுருக்கமாக சொன்னால் 213 மில்லியனில் 86.2 மில்லியன் மீளளிப்பு, முத்திரை தீர்வு 14 மில்லியன், தண்டப்பணம் 15 மில்லியன், PSDG 08 மில்லியன், Digital Board இற்கு எடுக்கும் கடன் 2.5 மில்லியன் LDSP 32 மில்லியன், வெளியில் இருந்து வருவது 159 மில்லியன் ஆகும். எனவே மொத்தமாக சபையின் சொந்த வருமானம் 53.9 மில்லியன் ஆகும். சென்ற வருடத்தை விட 38% கூட ஆகும்.

விகித வரிகள் 4.3 மில்லியனிலிருந்து 8.6 மில்லியன் ஆக கூட்டியுள்ளோம். ஏனென்றால் 20 வட்டாரங்களை சபைக்குள் கொண்டுவருவதனால் அவ் வட்டாரங்களில் இருந்து அறவிடக்கூடிய தொகையை சேர்த்து 8.6 மில்லியன் ஆக மாற்றப்படுகின்றது. இதற்கு அப்பால் இன்று வரையிலான விகித வரியில் இருக்கும் அறவிட வேண்டிய தொகை 13.6 மில்லியன் ஆகும். இப் பணத்தை அறவிடுவது எமது எல்லோரினதும் பொறுப்பாக மாறினால்தான் இச் சவாலை நாம் வெல்லலாம். உதாரணமாக மட்டக்களப்பு GA அரசாங்க அதிபராக இருக்கின்ற பழைய உள்ளூராட்சி ஆணையாளர் அவர்கள் Commissioner ஆக வந்தவுடன் அவரும் சேர்ந்து வீடு வீடாக சென்று அத் தொகைகள் அறவிடப்பட்டது. இது அரசியல் காரணங்களுக்காக நாம் கிழக்கு மாகாணத்தில் அதுவும் எமது பிரதேசத்தில் வரி அறவிடுவது என்றால் அது எமது பொறுப்பு இல்லை என்று விடுகின்றார்கள். ஆனால் நாம் வரி அறவிடாமல் செலவு செய்ய இயலாது. அதுதான் எமது வருமானம் ஆகும்.

குற்றப்பணங்கள் சென்ற வருடம் 10 மில்லியன் மதிப்பீடு செய்தோம். இவ் வருடம் 15 மில்லியனாக கூட்டியுள்ளோம். முத்திரை தீர்வு சென்ற வருடம் 12 மில்லியன் ஆகும். கிட்டத்தட்ட 7.3 மில்லியன் ஏற்கனவே கிடைத்துள்ளது. 2018 ஆம் ஆண்டுக்குரிய முத்திரை தீர்வு எமக்கு கிடைக்கவில்லை. அது 7.1 மில்லியன் வருவதற்கு உள்ளது. அதை உள்வாங்கிதான் 2019 இற்கும் அதே கணக்கை செய்து 14 மில்லியன் முத்திரை தீர்வாக உள்வாங்கப்பட்டுள்ளது. மொத்த நிர்வாகத்தில் எமது சபையின் வருமானமாக 11.36 மில்லியன் மதிப்பீடு செய்துள்ளோம். இது சென்ற வருடத்தை விட 82% கூடுதலாக கணிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் 2019 ஆம் ஆண்டு சுகாதார சேவைகளில் சொந்த வருமானமாக இருந்தது 3.5 மில்லியன் ஆகும். ஆனால் இம்முறை நாம் 5.9 மில்லியனாக கூட்டியுள்ளோம். இதற்கு முக்கிய காரணம் Trade Licence இது ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்பட்டால் 1.3 மில்லியனாக இருந்ததை 2 மில்லியனாக கூட்டலாம்.

திண்மக்கழிவு சேவைக் கட்டணம் வரி அறவிடாத பகுதிகளில் திண்மக்கழிவு சென்ற வருடம் 4 இலட்சம் மதிப்பீடு செய்து 7 இலட்சம் சேர்த்துள்ளோம். சேர்க்கக்கூடிய தொகையாக 2 மில்லியன் கணிக்கப்பட்டுள்ளது.

வெளிப்புர திட்டமிடல் வீதிகள் கட்டடங்கள் இதில் ஒரு பிரச்சினை உள்ளது. சென்ற வருடம் வாகன வாடகையாக 33.2 மில்லியன் நாம் மதிப்பீடு செய்தோம். Backhoeo, Motor Grader, Road Roller, Janasa Vehicle, Water Bowser, போன்றவற்றால் இவ் வருடத்திற்குள் மொத்தமாக இன்றுவரை ரூபா 277000/- வருமானமாக எடுத்துள்ளோம். இதில் கௌரவ உறுப்பினர்களின் கருத்துப்படி கௌரவ உப தவிசாளரும் கலந்துரையாடலில் என்னுடன் பேசும் போது அவ் வாகனத்தை செலுத்தும் சாரதியின் செயற்றிறன் இல்லாத காரணத்தினால் எமக்கு வருமானம் வருகின்ற குறைபாடு இருக்கின்றது என்றும் அதே நேரம் எமது Private Rate ஐ விட கூடியதாக உள்ளது. எனவே இரண்டையும் உள்வாங்கி நிபுணத்துவம் உள்ள இதை விட திறனாக செய்யக்கூடிய சாரதியை ஒப்பந்த அடிப்படையிலாவது எடுத்து அவ் வருமானத்தை கூட்டுவதற்கு ஒரு முயற்சி எடுத்தால் நாம் உத்தேசித்து இருக்கும் 1.6 மில்லியன் வருமானத்தை விட கூடிய வருமானத்தை எடுக்கலாம். இவ்வாறு செய்யும் பட்சத்தில் செலவீனத்தையும் அதற்கு ஏற்றவாறு கூட்டலாம்.

**தீர்மானம் 12**

எமது சபையின் JCB சாரதியின் தேர்ச்சியற்ற இயக்கம் காரணமாக JCB வாகனத்தினை வாடகைக்கு விடுவதால் ஏற்படும் வருமான இழப்பினை ஈடுசெய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் அல்லது நியமிக்கப்பட்டுள்ள தற்காலிக சாரதிகளில் திறமையான ஒருவரை பயன்படுத்த சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ.ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

வெளிப்புற திட்டமிடலில் இன்னொரு விடயம் உள்வாங்கப்படுகின்றது. அதாவது Digital Advertising Board மூலமாக ஆகக் குறைந்த கணக்காக காத்தான்குடியில் தற்போது மாநகர சபையும், Private நிறுவனமும் சேர்ந்து நடத்துகின்றது. அவர்களின் கணிப்பு ஆகக் குறைந்தது ஒவ்வொரு மாதத்திற்கும் 5 அல்லது 6 இலட்சம் எடுக்கலாம். ஆனால் நாம் கணிப்புக்காக 4 இலட்சம் படி 4.8 மில்லியன் Digital Board இல் இருந்து வருமானமாக எதிர்பார்க்கின்றோம். வெளிப்புற திட்டமிடல் வீதிகள் கட்டடங்களில் இதற்கு மேலாக PSDG இல் 8 மில்லியன் வரலாம் என்ற ஒரு உத்தேசம். LDSP மூலம் எமக்கு அடுத்த வருடம் வரக்கூடிய தொகை 32 மில்லியன் ஆகும். Digital Board இற்கு கடனையும் சேர்த்து 2019 இற்கும் 2020 இற்கும் இடையில் வருமான வித்தியாசம் ஏரத்தாள 80% ஆக கூட்டி நாம் கணக்கெடுத்துள்ளோம்.

வேறு பொதுச் செயற்பாட்டு சேவைகள் இதில் பாரிய மாற்றங்கள் இல்லை. ஏனென்றால் பொதுவாக இவ் ஊரில் இறைச்சிக் கடைகள் மற்றும் பொதுச் சந்தை குத்தகைகள் அதிகமாக இருக்கின்றது. அதனால் பிரச்சினைகள் எழுகின்ற கருத்து நிலவுவதால் அதில் வருமானத்தை கூட்டும் முயற்சி ஒன்று செய்படவில்லை. இவ் வருடம் எமக்கு ஏப்ரல் 21 ஆந் திகதிக்கு பின்னர் நடந்த சம்பவத்தினால் வருமானம் குறைந்து வேறு பொதுப் பயன்பாடு சேவைகளில் உண்மையாக இவ் வருடத்திற்கு 69% குறைந்த வருமானமே நாம் மதிப்பீடு செய்துள்ளோம். 2019 ஆண்டு 24.5 மில்லியன் மதிப்பீடு செய்திருந்தும் இவ் வருடத்திற்கு 22.86 மில்லியன் ஆக வருகின்றது.

நலன்புரி சேவைகளும் வசதிகளும் இதில் கிட்டத்தட்ட 58% வருமானத்தை கூட்டும் முயற்சி ஒன்று எடுக்கப்படுகின்றது. விளையாட்டு கட்டிடத் தொகுதியில் உத்தேச வருமானமாக சென்ற வருடம் 1.7 மில்லியனை 3 மில்லியனாக மாற்றி இருக்கின்றோம். அப்துல் மஜீட் மண்டபம் நாம் கட்டணம் கூட்டிய படியினால் அது 1.5 மில்லியனில் இருந்து 2 மில்லியனாக மாற்றி அமைத்திருக்கின்றோம். இதில் விளையாட்டு கட்டிடத் தொகுதியில் உங்களுக்கு தெரியும் ஒரு வருடமாக அந்த Hall இருக்கவில்லை. அங்கு Audio/Video வசதிகள் வைத்து Air Conditioned Resource Centre ஆக

மாற்றி எல்லா வசதிகளையும் செய்தால் வருமானத்தை 3 மில்லியனாக காட்டப்படுகின்றது. மொத்த வருமானத்தில் கணிக்கப்பட்ட சொந்த வருமானமாக 53.9 மில்லியன். முத்திரை தீர்வு, Digital Board Loan எல்லாம் சேர்த்து கிட்டத்தட்ட 85 மில்லியன் சொந்த வருமானம் எடுப்பதற்குரிய ஒரு வரவு செலவு திட்டம் வருமானப் பக்கத்தில் உள்ளது.

**செலவு**: செலவீனங்களை எடுத்தால் 2019 ஆம் ஆண்டு செலவீனங்களாக மதிப்பீடு செய்த மொத்த தொகை சபையின் பணத்தில் 62.5 மில்லியன் ஆகும். 2020 ஆம் ஆண்டில் அதை நாம் 85.2 மில்லியனாக கூட்டியுள்ளோம். அதன் வித்தியாசம் 22.7 மில்லியன் ஆகும். அதில் முக்கியமான அம்சங்கள் வாகன திருத்தம். வாகனங்கள் எல்லாம் பழைய வாகனங்கள் ஆகும். இதனால் சென்ற வருடத்தை விட ஒரு மடங்கு கூட்டி 4 இலட்சமாக இருந்ததை 8 இலட்சமாக வாகன திருத்தத்திற்கு கூட்டியுள்ளோம். ஏனையவைகள் சென்ற வருடத்திற்கு சமனான தொகைகள் ஆகும்.

சட்டக் கட்டணம் 1 இலட்சமாக இருந்ததை 8 இலட்சமாக மாற்றியுள்ளோம். பொது வைபவங்கள் சென்ற வருடத்தை விட 2 மடங்கு இவ் வருடத்தில் 8 இலட்சமாக கூட்டியுள்ளோம். புது வருட கொண்டாட்டம், சிறுவர் தினம், முதியோர் தினம் போன்ற நிகழ்வுகளுக்கு Budget இல் பணம் இல்லாவிட்டால் அதை செய்ய இயலாது. இதற்காக 8 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகளில் களஞ்சியப் பொருட்கள் 2 ½ இலட்சம் இருந்ததை 1 மில்லியனாக மாற்றியுள்ளோம். இதற்கு காரணம் பிளாஸ்டிக் Bucket கொள்வனவு செய்து கொடுப்பதற்கான உத்தேச செலவு ஆகும்.

Compost Yard தளபாடங்கள் உபகரணங்கள் 4 இலட்சத்தில் இருந்து 8 இலட்சத்திற்கு மாற்றியதற்கு காரணம் அட்டாளைச்சேனையில் உள்ள கவசீமா இயந்திரம் இயங்கத் தொடங்கியவுடன் உக்கும் கழிவு அங்கு செல்ல வேண்டும். உக்காத கழிவுகளை நாம் தெரிவு செய்து ஏதாவது செய்ய வேண்டும். பிளாஸ்டிக் எல்லாவற்றையும் சேர்த்து அதை உடைத்து செய்வதற்கு இயந்திரம் எடுக்க வேண்டும். இதற்காக செலவீனத்தை கூட்டியுள்ளோம்.

வெளிப்புற திட்டமிடல் தெருக்கள், காணி கட்டடங்கள் இதில் பாரிய மாற்றங்கள் இல்லை. சென்ற வருட தொகைகள் ஆகும். பிரமான அடிப்படையில் அமைச்சுகளில் இருந்து பாதைகளுக்கும், சிறுவர் பூங்கா திருத்தம் என்பவற்றுக்கு கிட்டத்தட்ட 8 மில்லியன் வரலாம் என்று செலவாக காட்டப்பட்டுள்ளது. பொது பயன்பாட்டில் பாரிய மாற்றமாக வருவது சந்தை உள்ளக மீன் சந்தை திருத்தம் இதில் 10 இலட்சம் போடப்பட்டுள்ளது. இதில் பாரிய செலவீனம் மல்வத்தை சந்தை புதுப்பிப்பதற்கு மற்றும் கொச்சிக்காதூளர்ர சந்தியில் உள்ள கடைகள் திருத்தம் என்பவற்றுக்காக ஆகும்.

மூலதன செலவுகளில் பொது மைதானவெளிக்கு 10 இலட்சம், உபகரணங்கள் 750000/- ஆகும். சந்தையில் நிறுவைகள் சரியில்லை என்று முறைப்பாடுகள் வருகின்றது. நாம் இடத்துக்கு இடம் Electronic Scale வைத்தால் யாராவது கடையில் வாங்கி அதில் நிறுத்துப்பார்க்கக் கூடியதாக வைத்தால் எல்லோருக்கும் ஒரு கட்டுப்பாடு வரும். விளையாட்டு தொகுதி திருத்த வேலைகள் சொத்துக்கள் பழுதுபார்த்தலும் பேணுதலும் என்பவற்றுக்கு 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பெண்கள் வலுவூட்டலில் மாற்றுக் கருத்து ஒன்று வருகின்றது. என்னவென்றால் பெண் அங்கத்தவர்களுக்காக மட்டுமாக இருக்கக்கூடாது. சகல அங்கத்தவர்களுக்கும் பெண்கள் வலுவூட்டல் திட்டங்களுக்காக ஒரு ஒதுக்கீடு செய்ய வேண்டும். இப் பணம் சகல அங்கத்தவர்களுக்கும் ஆனால் இதைத்தான் செய்ய வேண்டும் என்ற ரீதியில் பங்களிக்கப்பட வேண்டும். எனவே இதை கூட்ட வேண்டும். தற்போது இருக்கின்ற Budget இல் 1.2 மில்லியன் உள்ளது. ஆகக் குறைந்தது 2 இலட்சமாக இருந்தால் 4 மில்லியன் வேண்டும். இன்னும் 2.7 மில்லியன் தேவைப்படும். நீங்கள் கருத்துக்களை கூறினால் அதை மாற்றியமைக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வரவு செலவு திட்டத்தின் மாதிரி குழுக் கூட்டத்தில் நாம் எடுக்கப்பட்ட முடிவின் பிரகாரம் பழைய மாடு அறுக்கின்ற மடுவத்தையை பொது நூலகமாக மாற்றுவதற்கு அச் செலவை இவ் வரவு செலவு திட்டத்தில் உள்ளடக்குவதாக ஒரு முடிவு எடுத்திருந்தோம். ஆனால் வரவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சில விடயங்களை வெளியில் இருந்து கொண்டு வந்து செய்யலாம் என்ற ரீதியில் இதற்குள் கொண்டுவரவில்லை. ஏனென்றால் இதற்குள் கொண்டு வந்தால் இன்னுமொன்றை குறைக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வெளியில் இருந்து நிதியை பெறுவது என்பது சாத்தியமற்ற விடயம் ஆகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் எதை மாற்றலாம் என்று கூறினால் அதை மாற்றிவிட்டு இதை தீர்மானமாக எடுக்கலாம்.

கல்வி ஊக்குவிப்பிற்கு புத்தக கொள்வனவுக்கு 1.7 மில்லியன் ஒதுக்கியுள்ளோம். அதாவது சம்மாந்துறை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சகல பாடசாலைகளுக்கும், வாசக நிலையங்களுக்கும் சம்மாந்துறையின் சரித்திரம் என்ற நூலை கொள்வனவு செய்து இலவசமாக வழங்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வடிகான் அமைப்புக்கு நாம் அதிகமான பணம் செலவளிக்க வேண்டும். ஏனென்றால் தற்போது அக்கரைப்பற்று பிரதேசம் போல் எமது பிரதேசத்திலும் இருந்த வடிகான்கள் மூடியதாக வீதியாக மாற்றப்பட்டுள்ளது. எனவே சிறிய மழை பெய்தாலும் வீதியில் நீர் ஓடிக்கொண்டிருக்கின்றது. அதற்கு வடிகான் அமைப்பது நல்லம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்கு Allocation கூட்டுவதற்குரிய வழிகளை எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம். எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வரவு செலவுத் திட்ட உரையாடலின் போது உறுப்பினர்களுக்கான வெளிநாட்டு சுற்றுலா தொடர்பாக எப்போது செல்வது என்று ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நமக்காக எது செலவு செய்வதிலும் சபை அங்கத்தவர்களின் பங்கீட்டோடு வருமானத்தை கூட்டி இதை செய்து அதன் பெறுமதியாகத்தான் செய்யவேண்டும். வருமானத்தை கூட்டிக்காட்டுவோமானால் அதற்கு நியாயப்படுத்தல் வரும்.

**தீர்மானம் 13**
1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவிற்கமைய சமர்ப்பிக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தினை ஏற்றுக்கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**தீர்மானம் 14**
சம்மாந்துறையின் சரித்திரம் என்ற புத்தகங்களை கொள்வனவு செய்து சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளுக்கும், நூலக, வாசக நிலையங்களுக்கும் இலவசமாக வழங்குவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

**தீர்மானம் 15**
1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 12வது பிரிவிற்கமைய சபையில் சமர்ப்பிக்கப்பட்ட குழுக்கள் விபரம் ஆராயப்பட்டதன் பின்னர், குறித்த 04 ஆலோசனைச் சபைகளும் உடனடியாக செயற்படுவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம்.நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம். சஹீல் |

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 2019 ஆம் ஆண்டு வலுவூட்டலில் சகல கௌரவ உறுப்பினர்களுக்கும் 2 மில்லியன் ஒதுக்கீடு செய்து பெற்றுத்தர வேண்டும் என்று சபையில் முன்வைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உறுப்பினர்களுக்கு என்று செய்ய இயலாது. அதனால்தான் வலுவூட்டலுக்கு கீழ் வருகின்றது. நான் மீண்டும் வருமானத்தை பார்த்துவிட்டு அதில் மாற்றம் செய்வது என்றால் இச் சபையில் தீர்மானம் எடுத்ததாக இம் மாத முடிவுக்குள் ஒரு ஏற்பாடு செய்வோம்.

சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.